
**ஜூலை – 13**

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## SC/ST குழு மறுசீரமைப்பு


- தமிழ்நாடு அரசானது, பட்டியலிடப்பட்ட சாதியினர் (SC) மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினருக்கான (ST) மாநில அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுவை மறுசீரமைத்துள்ளது.
- இக்குழுவின் தலைவராக முதலமைச்சர் செயல்படுவதுடன் இக்குழுவில் பட்டியலிடப் பட்ட சாதியினர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற மற்றும் மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் 59 பேர் இதன் உறுப்பினர்களாக உள்ளனர்.
- இக்குழுவில் உள் துறை, நிதி மற்றும் சமூக நீதித்துறை அமைச்சர்கள், தலைமைச் செயலாளர், உள் துறைச் செயலாளர், காவல்துறை தலைமை இயக்குநர் (DGP) / காவல் துறைத் தலைவர் (HoPF), மற்றும் தேசிய பட்டியலிடப்பட்ட சாதியினருக்கான ஆணையம் (NCSC) மற்றும் தேசிய பழங்குடியினருக்கான ஆணையம் (NCST) ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஆகியோரும் அடங்குவர்.
- சமூக நீதித் துறையின் செயலாளர் இக்குழுவின் ஒருங்கிணைப்பாளராகச் செயல் படுகிறார்.
- பட்டியலிடப்பட்ட சாதியினர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம், 1989-ஐ செயல்படுத்துவதை ஆய்வு செய்வதற்காக, இக்குழு ஆண்டுக்கு இரண்டு முறை கூடுகிறது.
- இது வன்கொடுமைகளைத் தடுப்பதற்கும், SC/ST சமூகங்களின் நலன் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைக் கண்காணிக்கிறது.




## உயர்கல்வி மொத்த சேர்க்கை விகிதத்தில் (GER) தமிழ்நாடு

- அகில இந்திய உயர்கல்வி கணக்கெடுப்பு (AISHE) 2023-24-இன் படி, இந்தியாவில் உயர் கல்வியில் அதிக மொத்த சேர்க்கை விகிதத்தை (GER) தமிழ்நாடு பதிவு செய்துள்ளது.
- தமிழ்நாட்டின் GER 52.3% ஆக அதிகரித்துள்ளது என்பதோடு இது முதல் முறையாக 50%-ஐத் தாண்டி யுள்ளது.

- மாநிலத்தில் உள்ள 18-23 வயதுக்குட்பட்ட 68.4 லட்சம் இளைஞர்களில் சுமார் 35.8 லட்சம் மாணவர்கள் உயர்கல்வியில் சேர்ந்துள்ளனர்.
- மாநிலத்தில் 2,983 கல்லூரிகள் உள்ளன என்ற நிலையில் இது முந்தைய ஆண்டை விட 70 கல்லூரிகள் அதிகமாகும்.
- உயர்கல்வியில் மாணவியரின் சேர்க்கை விகிதம் (GER) 53.1% ஆகவும், மாணவர்களின் சேர்க்கை விகிதம் 51.6% ஆகவும் பதிவாகியுள்ளது.




# தேசியச் செய்திகள்

## மனித-வனவிலங்கு மோதல் குறித்த சிறப்பு மையம்

- கோயம்புத்தூரில் உள்ள இந்திய வனவிலங்கு நிறுவனம்-சலிம் அலி பறவையியல் மற்றும் இயற்கை வரலாற்று மையத்தில் (WII-SACON) மனித-வனவிலங்கு மோதல் குறித்த சிறப்பு மையத்தை (CoE) மத்திய அமைச்சர் பூபேந்தர் யாதவ் திறந்து வைத்தார் மற்றும் தேசிய மனித-வனவிலங்கு மோதல் இணையதளத்தையும் தொடங்கி வைத்தார்.
- தேசிய வனவிலங்கு வாரியத்தின் (NBWL) 7வது கூட்டத்தின் போது, இந்த சிறப்பு மையத்தை நிறுவுவது குறித்து பிரதமரால் அறிவிக்கப்பட்டது.
- இம்மையம் ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு, கொள்கை ஆதரவு, திறன் மேம்பாடு மற்றும் மனித-வனவிலங்கு மோதலை அறிவியல் ரீதியாக கையாள்வதற்கான தேசிய மையமாக செயல்படும்.
- தேசிய மனித-வனவிலங்கு மோதல் இணையதளமானது, இந்தியா முழுவதும் மோதலைத் தணிப்பதற்கான தரவு மேலாண்மை, அறிவுப் பகிர்வு மற்றும் முடிவெடுக்கும் திறனை மேம்படுத்தும்.
- மேலும், நாட்டின் மோதல் போக்குகள் மற்றும் வளர்ந்து வரும் சவால்களை

முன்னிலைப்படுத்தும் "Current Status of Human-Wildlife Conflict in India: An Overview" என்ற அறிக்கையின் முதல் பதிப்பும் வெளியிடப்பட்டது.




## 3-வது பிரிக்ஸ் போக்குவரத்து பணிக்குழு கூட்டம்




- இந்தியாவின் 2026 ஆம் ஆண்டிற்கான பிரிக்ஸ் தலைமையின் கீழ், 3-வது பிரிக்ஸ் போக்குவரத்து பணிக்குழு (TWG) கூட்டம் மகாராஷ்டிராவின் நாக்பூரில் தொடங்கியது.
- இது நிலையான மற்றும் எதிர்காலத்திற்குத் தயாரான போக்குவரத்து அமைப்புகள் குறித்து உறுப்பு நாடுகளிடையே ஒத்துழைப்பை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வளர்ந்து வரும் உலகளாவிய போக்குவரத்து சவால்களை எதிர்கொள்ள, நிலையான போக்குவரத்து உள்கட்டமைப்பு, தூய்மையான இயக்கம், சரக்குப் போக்குவரத்து மீள்திறன் மற்றும் பன்முக இணைப்பு போன்ற முக்கிய பகுதிகள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப் படுகிறது.
- இந்தியாவின் பிரிக்ஸ் தலைமையின் கருத்துரு "Building for Resilience, Innovation, Cooperation and Sustainability" என்பதாகும்.
- இந்தியாவின் தலைமையின் கீழ் உள்ள ஆறு முக்கிய முன்னெடுப்புகளில் நிலையான உள்கட்டமைப்பு, நிலையான விமான எரிபொருள் (SAF), போக்குவரத்தில் கரியமில வாயு வெளியேற்றத்தைக் குறைத்தல், நகர்ப்புற இயக்கம், மீள்திறன் கொண்ட

சரக்குப் போக்குவரத்து மற்றும் இரயில்வே ஆராய்ச்சி ஒத்துழைப்பு ஆகியவை அடங்கும்.

- இக்கூட்டத்தை மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் (MoRTH) ஏற்பாடு செய்தது.
- பிரிக்ஸ் நாடுகள் கூட்டாக உலக மக்கள் தொகையில் 49.5%, உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 40% மற்றும் உலகளாவிய வர்த்தகத்தில் 26% ஆகியவற்றை கொண்டுள்ளன என்பதுடன் இது உலகளாவியப் போக்குவரத்து ஒத்துழைப்பில் அவற்றின் பங்கை எடுத்துக் காட்டுகிறது.

## சர்வதேசச் செய்திகள்

### ACITI தொழில்நுட்பக் கூட்டாண்மை




- தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்தில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் கனடா ஆகிய நாடுகள் இணைந்து ஆஸ்திரேலியா-கனடா-இந்தியா தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க கூட்டாண்மையை (ACITI) தொடங்கி உள்ளன.
- இந்த முத்தரப்பு கூட்டாண்மையானது செயற்கை நுண்ணறிவு (AI), பசுமை ஆற்றல் தொழில்நுட்பங்கள், முக்கிய கனிமங்கள் மற்றும் மீள்திறன் கொண்ட விநியோகச் சங்கிலிகள் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- கனடாவின் AI மற்றும் சுத்தமான தொழில்நுட்ப நிபுணத்துவம், இந்தியாவின் டிஜிட்டல் உள்கட்டமைப்பு மற்றும் ஆஸ்திரேலியாவின் வளம் மற்றும் வணிகமயமாக்கல் திறன்களை இணைப்பதை ACITI நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தக் கூட்டாண்மையானது நிகர பூஜ்ஜிய தொழில்நுட்பங்கள், தொழில்துறை திட்டங்கள் மற்றும் நிலையான தொழில்நுட்ப சுற்றுச்சூழல் அமைப்புகளில்

ஒத்துழைப்பை மேம்படுத்துகிறது.

- ஜோகன்னஸ்பர்க்கில் நடைபெற்ற G20 உச்சிமாநாட்டில் (2025) மூன்று நாடுகளின் தலைவர்கள் சந்தித்த பிறகு இது அறிவிக்கப் பட்டது.

## பிரிக்ஸ் பெண் அமைச்சர்களின் கூட்டம் 2026

- பெண்கள் தலைமையிலான மேம்பாடு மற்றும் பாலின சமத்துவத்தில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக, இந்தியாவின் 2026 ஆம் ஆண்டிற்கான பிரிக்ஸ் தலைமையின் கீழ் கேரளாவின் கொச்சியில் பிரிக்ஸ் பெண் அமைச்சர்களின் கூட்டம் முடிவடைந்தது.
- இக்கூட்டமானது பிரிக்ஸ் பெண்கள் பணிக்குழு கூட்டம் மற்றும் பிரிக்ஸ் பெண் அமைச்சர்களின் கூட்டம் ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது.
- பிரிக்ஸ் பெண்கள் பிரிவின் கீழ் முதன்முறையாக ஒரு கூட்டு அறிக்கையை இக்கூட்டம் ஏற்றுக் கொண்டது.
- வெற்றிகரமான கொள்கைகள் மற்றும் கண்டுபிடிப்புகளைப் பகிர்வதற்கான சிறந்த நடைமுறைகளின் பிரிக்ஸ் டிஜிட்டல் களஞ்சியம் மற்றும் நிறுவன ஒத்துழைப்பு மற்றும் அறிவுப் பரிமாற்றத்தை வலுப்படுத்துவதற்கான பிரிக்ஸ் டிஜிட்டல் திறன் மேம்பாட்டு வழிகாட்டுதல்கள் ஆகிய இரண்டு முன்னெடுப்புகளை இந்தியா அறிமுகப் படுத்தியது.
- டிஜிட்டல் உள்ளடக்கம், பெண்கள் தொழில்முனைவு, நிதி அதிகாரமளித்தல், பருவ நிலை மீள்திறன், உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து ஆகியவற்றில் விவாதங்கள் கவனம் செலுத்தின.
- இக்கூட்டமானது மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் (MWCD) ஏற்பாடு செய்யப்பட்டது மற்றும் நிலையான வளர்ச்சியின் உந்துசக்தியாக பெண்கள் தலைமையிலான மேம்பாட்டை முன்னெடுப்பதற்கான பிரிக்ஸ் நாடுகளின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தியது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ஈயத்தை அகற்றும் முறை - ஐஐடி கவுகாத்தி

- மாசடைந்த நீரிலிருந்து ஈயத்தை அகற்றுவதற்காக, சயனோபாக்டீரியாவைப்

(நீலப்பசும் பாசி) பயன்படுத்தி ஒரு உயிரியல் பொருளை இந்தியத் தொழில்நுட்பக் கழகம் கவுகாத்தியின் (IITG) ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

- ❖ உயிரியல் அறிவியல் மற்றும் உயிரிப் பொறியியல் துறையைச் சேர்ந்த பேராசிரியர் தேபாசிஸ் தாஸ் தலைமையிலான ஆய்வுக்குழு, பாசிகளால் உற்பத்தி செய்யப்படும் சர்க்கரை நிறைந்த பொருளான எக்ஸோபாலிசாக்கரைடுகள் (EPS), நச்சுத்தன்மை வாய்ந்த ஈயத் துகள்களை உறிஞ்சும் திறன் கொண்டவை என்பதைக் கண்டறிந்து உள்ளது.
- ❖ உருவாக்கப்பட்ட இந்த உயிரியல் பொருள், இயற்கை இரசாயனக் குழுக்கள் மூலம் ஈயத் துகள்களுடன் பிணைக்கப்படுவதன் மூலம் மாசடைந்த நீரிலிருந்து 66.2% ஈயத்தை அகற்றியது.
- ❖ சயனோபாக்டீரியாக்கள் குளங்கள், ஏரிகள், நீர்த்தேக்கங்கள், நெல் வயல்கள் மற்றும் மெதுவாக நகரும் நன்னீர் நிலைகளில் இயற்கையாகவே கிடைப்பதுடன் இது இந்த முறையை நிலையானதாகவும் சுற்றுச்சூழலுக்கு உகந்ததாகவும் ஆக்குகிறது.
- ❖ இரசாயன வீழ்படிவாக்கல், சவ்வு வடிகட்டுதல் மற்றும் அயனிப் பரிமாற்றம் போன்ற வழக்கமான முறைகள் அதிக செலவுடையவை மற்றும் இரண்டாம் நிலை மாசுபடுத்திகளை உருவாக்கும் அதே வேளையில், இந்த முறையானது சிறந்த சுற்றுச் சூழலுக்கு உகந்த மாற்றீட்டை வழங்குகிறது.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### வனவிலங்குகளுக்கான கூட்டங்கள் 2026

- ❖ தேசிய வனவிலங்கு வாரியத்தின் (NBWL) 91-வது நிலைக்குழுக் கூட்டம், மத்திய உயிரியல் பூங்கா ஆணையத்தின் (CZA) 46-வது கூட்டம் மற்றும் தேசியப் புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் (NTCA) 29-வது கூட்டம் ஆகியவை 2026 ஆம் ஆண்டு ஜூலை

மாதம் தமிழ்நாட்டின் கோயம்புத்தூரில் நடைபெற்றன.

- தேசிய வனவிலங்கு வாரியம் (NBWL) என்பது 1972 ஆம் ஆண்டின் வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு சட்டப்பூர்வ ஆலோசனைக் குழுவாகும் என்பதோடு இதன் தலைவராக பிரதமர் செயல்படுகிறார்.
- இது வனவிலங்குப் பாதுகாப்பு குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குகிறது மற்றும் பாதுகாக்கப்பட்ட பகுதிகளைப் பாதிக்கும் திட்டங்களை ஆய்வு செய்து அனுமதி அளிக்கிறது.
- மத்திய உயிரியல் பூங்கா ஆணையம் (CZA) என்பது 1972 ஆம் ஆண்டின் வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் (1991 திருத்தம்) கீழ் நிறுவப்பட்ட ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும் என்பதுடன் இதன் தலைவராக மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத்துறை (MoEFCC) அமைச்சர் செயல்படுகிறார்.
- இது வனவிலங்குப் பாதுகாப்பு, கல்வி மற்றும் அறிவியல் மேலாண்மையை மேம்படுத்துவதற்காக உயிரியல் பூங்காக்களை ஒழுங்குபடுத்துகிறது, அங்கீகரிக்கிறது மற்றும் கண்காணிக்கிறது.
- தேசியப் புலிகள் பாதுகாப்பு ஆணையம் (NTCA) என்பது 2006 ஆம் ஆண்டுத் திருத்தத்தின் மூலம் 1972 ஆம் ஆண்டின் வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் அமைக்கப் பட்ட ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும், மேலும் இதன் தலைவராக மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத் துறை (MoEFCC) அமைச்சர் செயல் படுகிறார்.
- இது புலிகள் திட்டத்தை செயல்படுத்துகிறது, புலிகள் பாதுகாப்புத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கிறது மற்றும் புலிகள் காப்பகங்களின் பாதுகாப்பை வலுப்படுத்துகிறது.
- NBWL கூட்டத்தின் போது, வனவிலங்கு அனுமதி தேவைப்படும் 100-க்கும் மேற்பட்ட மேம்பாட்டுத் திட்டங்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டன என்பதுடன் CZA கூட்டத்தில் உயிரியல் பூங்கா நவீனமயமாக்கல் மற்றும் வனவிலங்கு சுகாதாரம் குறித்தும், NTCA கூட்டத்தில் புலிகள் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை நடவடிக்கைகள் குறித்தும் விவாதிக்கப் பட்டது.




## மிசோரம் இயற்கை வரலாற்று அருங்காட்சியகம்

- தேசியப் பல்லுயிர் ஆணையத்தின் (NBA) பரிந்துரையின் பேரில், மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தால் (MoEFCC) 2002 ஆம் ஆண்டின் உயிரியல் பன்முகத்தன்மை சட்டத்தின் கீழ் இந்தியாவின் 21-வது அங்கீகரிக்கப்பட்ட களஞ்சியமாக மிசோரமில் உள்ள இயற்கை வரலாற்று அருங்காட்சியகம் (NHM) அறிவிக்கப் பட்டுள்ளது.

- ஓர் அங்கீகரிக்கப்பட்ட களஞ்சியம் என்பது 2002 ஆம் ஆண்டின் உயிரியல் பன்முகத் தன்மை சட்டத்தின் கீழ் அணுகப்படும் அங்கீகரிக்கப்பட்ட உயிரியல் மாதிரிகளைப் பாதுகாப்பதற்கும், பல்லுயிர் பாதுகாப்பிற்கான பதிவேடுகளைப் பராமரிப்பதற்கும் பொறுப்பான ஒரு நிறுவனமாகும்.
- மிசோரம் இயற்கை வரலாற்று அருங்காட்சியகம் 2022-ஆம் ஆண்டில் மத்திய பல்கலைக் கழகமான மிசோரம் பல்கலைக்கழகத்தின் கீழ் நிறுவப்பட்டதுடன் மேலும் இது இந்தோ-பர்மா பல்லுயிரிய வள மையத்தில் அமைந்துள்ளது.
- இந்த அருங்காட்சியகம் பெரணி தாவரங்கள் (pteridophytes) மற்றும் பெரும் பூஞ்சைகள் போன்ற தாவரங்களின் மாதிரிகளையும், ஊர்வன, நீர்நில வாழ்வன, மீன்கள், அந்துப்பூச்சிகள், வண்டுகள் மற்றும் பட்டாம்பூச்சிகள் உள்ளிட்ட விலங்கினங்களின் மாதிரிகளையும் பாதுகாக்கும்.
- புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட உயிரினங்களின் மாதிரி வகைகளுக்கான களஞ்சியமாகவும் இது செயல்படுவதுடன் உயிரினங்களை அடையாளம் காணுதல், அறிவியல் ஆராய்ச்சி மற்றும் பல்லுயிர் பாதுகாப்பு ஆகியவற்றிற்கு ஆதரவளிக்கும்.




# மாநிலச் செய்திகள்

## போதைப்பொருள் கடத்தல் தொடர்பான கவுஹாத்தி பிரகடனம்

- சட்டவிரோத போதைப்பொருள் கடத்தல் மற்றும் நாடு கடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுக்கு எதிரான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக வேண்டி, அசாமின் கவுஹாத்தியில் பிரிக்ஸ் நாடுகள் குவஹாத்தி பிரகடனத்தை ஏற்றுக் கொண்டன.
- பிரிக்ஸ் போதைப்பொருள் தடுப்பு முகமைகளின் இரண்டு நாள் கூட்டத்தின் போது இந்த பிரகடனம் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளதுடன் இது நிகழ்நேர நுண்ணறிவுப் பகிர்வு, தகவல் பரிமாற்றம் மற்றும் ஒருங்கிணைந்த சட்ட அமலாக்க நடவடிக்கைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- போதைப்பொருள் கடத்தல் வலைப்பின்னல்கள் மற்றும் வளர்ந்து வரும் சவால்களை எதிர்த்துப் போராடுவதற்கு புதுமையான தொழில்நுட்பங்கள், டிஜிட்டல் கருவிகள்

மற்றும் தரவு சார்ந்த அணுகுமுறைகளைப் பயன்படுத்த பிரிக்ஸ் நாடுகள் ஒப்புக் கொண்டன.

- செயற்கை போதைப்பொருட்கள், புதிய மனோதத்துவ பொருட்கள், முன்னோடி இரசாயனங்களை மடைமாற்றுதல், மெய்நிகர் சொத்துக்களை தவறாகப் பயன்படுத்துதல் மற்றும் குற்றவியல் வலைப்பின்னல்களால் கடல்சார் வழிகள் மற்றும் டிஜிட்டல் தளங்களை சுரண்டுதல் ஆகியவை குறித்த கவலைகளை இந்தப் பிரகடனம் எடுத்துரைத்தது.
- எல்லை தாண்டிய போதைப்பொருள் கடத்தல் கும்பல்களைச் சமாளிப்பதற்கு, வேகம், பரஸ்பர நம்பிக்கை மற்றும் பிரிக்ஸ் போதைப்பொருள் தடுப்புச் சட்ட அமலாக்க முகமைகளுக்கு இடையே தடையற்ற நுண்ணறிவுப் பகிர்வு ஆகியவற்றின் அடிப்படையிலான கூட்டாண்மைக்கு இந்தியா அழைப்பு விடுத்தது.
- பிரிக்ஸ் (பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாப்பிரிக்கா) அமைப்பானது எகிப்து, எத்தியோப்பியா, ஈரான், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் (UAE) மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளை உள்ளடக்கி விரிவடைந்துள்ளது.





# முக்கிய தினங்கள்

## உலக மக்கள் தொகை தினம் 2026 - ஜூலை 11

- குடும்பக் கட்டுப்பாடு, இனப்பெருக்க சுகாதாரம், பாலின சமத்துவம், தாய்மார் சுகாதாரம் மற்றும் நிலையான வளர்ச்சி ஆகியவற்றை ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது 1989 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தால் (UNDP) நிறுவப்பட்டது மற்றும் 1990 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப்பட்டு வருகிறது.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு Realizing the hopes and aspirations of young people – today and for the future என்பதாகும்.
- ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியமானது (UNFPA) உலகளாவிய பிரச்சாரத்தை

முன்னெடுத்துச் செல்கிறது என்ற நிலையில் 2026 ஆம் ஆண்டில் உலக மக்கள் தொகை 8.3 பில்லியனைத் தாண்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★